நாள் - 11.11.2022

**ST.C. No.**803/2022

**ம.சா.1-குமரவேல் , த/பெ. கந்தசாமி.**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 11**th day of November** 2022.

**குறுக்கு விசாரணை**

1. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்னுடைய மருமகனின் நிறுவத்தை பராமரித்து வருகிறேன். அந்நிறுவனத்தை ஏற்படுத்தியது என்னுடைய மருமகன் ஆவார். என்னுயைட பிரமாண வாக்குமூலத்தில் நானும் ஈவண்ட் மேனேமெண்ட் என குறிப்பிட்டு ள்ளேன் என்றால் சரிதான். நானும் என்னுடைய மருமகனும் கூட்டு குடும்பமாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான்.

2. மேற்படி வேலையை தவிர்த்து வேறு எந்த வேலையும் பார்க்கவில்லை. மேற்படி நிறுவத்தில் மாதத்திற்கு 3 லட்சத்திற்கு மேல் வருமானம் வரும். என்னுடைய தனிப்பட்ட வருமானம் என்று கிடையாது. மேற்படி வருமானததிலேயே நான் எனக்க தேவையான பணத்தை எடுத்து கொள்வேன். நான் வருமானவரி தாக்கல் செய்யவில்லை. நிறுவனத்திற்கு தான் வருமானவரி தாக்கல் செய்கிற்னே. அந்நிறுவனமானது தனிநபர் நிறுவனமாகும்.

3. எதிரியை 2- 1/2 வருடங்கருக்கு முன்னர் வரை எனக்கு தெரியும். எனக்கு தெரிந்த வினோத் என்பவர் எதிரியை எனக்கு பழக்கப்படுத்தி விட்டார். எதிரியை விட வினோத் தான் எனக்கு நெருங்கி நண்பர் என்றால் சரியல்ல. அறிமுகம் கிடைத்த பின்னர் வினோத்தை விட எதிரி தான் நெருங்கிய நண்பரக இருந்தார். எதிரிக்கு பணத்தை என்னுடைய வீட்டில் வைத்து கொடுத்தேன். அந்த சமய்ததில் என்னுடைய மகளுக்கு திருமணம் ஆகவில்லை. 10.02.2021 ம் தேதி என்னுடைய மகளுக்கு திருமணம் ஆனது.

4. நான் எதிரிக்கு பணம் கொடுத்தபொழுது எங்களுடன் வேறு யாரும் இல்லை. பணம் பெற்ற பொழுது எதிரியிடமிருந்து ஆவணங்கள் ஏதாவது பெற்றீர்களா என்றால் நான் கேட்கவும் இல்லை அவர் கொடுககவம் இல்லை. எதிரிக்கு ரூபாய் 1 லட்சம் கொடுத்தேன். ஒரே தவணையாக கொடுத்தேன். எதிரியிடமிருந்து நான் 2 காசோலைகளை பெற்றேன். இரண்டு காசோலைகளில் 20 ஆயிரம் 40 ஆயிரம் ரூபாயை எதிரியே தான் நிரப்பி கொடுத்தார். மீதி 40 ஆயிரம் ரூபாயை எதிரி கொடுப்பதாக கூறினார்.

5. ம.சா.ஆ.1 மற்றும் 2 காசோலைகளில் உள்ள எதிரியின் கையொப்பம், தொகை ஆகியவை கருப்பு நிற மையினாலும் என்னுடைய பெயர் நீல நிற மையினாலும்

எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பெயரை எதிரி கூறியதன் பெயரில் நான் தான் எழுதினேன். மற்றவற்றை எதிரி எழுதினார். ம.சா.ஆ.3 அனைத்து விபரங்களும் கருப்பு நிற மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனை எதிரியே தான் கொடுத்தார் யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. காசோலையை எதிரி நிரப்ப வில்லை என்றாலும் நானாக நிரப்பி கொண்டேன் என்றால் சரியல்ல. நான் அறிமுகபடுத்தி தான் என்னுடைய மருமகனுக்கு எதிரி பழக்கமாவார்.

4. என்னுடைய மருமகனிடம் எதிரி எவ்வளவு பணம் வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் நான் இருந்தது தான் வாங்கி கொடுத்தேன். ரூ.50 ஆயிரம் எதிரி பெற்றார். எதிரிக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் வினோத்தின் மூலம் காசோலை பெற்று எதிரிக்குஎதிராக பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குறைந்த பட்ச காசோலை கொடுககவேண்டி அவசியம் இல்லை என்றாலும் பொயயாக வழக்க தாக்கல் செய்துள்ே◌ள்ன. என்றால் சரியல்ல.

5. இவ்வழககு தொகைக்காக எதிரிக்கு எதிராக காவ்ல நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை. வேறொரு வரவு செலவு சம்பந்மாக எதிரிக்கு எதிராக புகார் அளித்திருந்தேன். 2021 ம் வருடம் புகார் அளித்தேன். எந்த மாதம் என்று தெரியவில்லை. எனக்கும் எதிரிக்கும் இடையயே ஏற் கனவே பிரச்சனை இருக்கும் சூழ்நிலையில் இருக்கும் சமயத்தில் எதிரிக்கு பணம் கொடுக்க வில்லை என்றால் சரியல்ல.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2022.11.11 18:21:36 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**